# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2006, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 5.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2006 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்**

[*2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 77/2006*

**2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I (துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு) அதன் 2 ஆம் பிரிவில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—*

*(1) அப்பிரிவிற்கான முதலாவது காப்பு வாசகத்தை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுதவதன் மூலம் :—*

*"ஆயின், மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் விலை, காப்புறுதி மற்றும் கேழ்வுப் பெறுமதி தொடர்பில்,—*

*(அ) 2004, நவெம்பர் 19 ஆம் தேதி தொடங்கி 2005 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 1.5 சதவீதத்திலான அறவீடொன்றும் ;*

*(ஆ) 2006, சனவரி 1 ஆம் தேதி தொடங்கி 2006 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 2.5 சதவீதத்திலான அறவீடொன்றும் ; அத்துடன்*

*(இ) 2007, சனவரி 1 ஆம் தேதி தொடங்கும் காலப் பகுதிக்கு 3.0 சதவீதத்திலான அறவீடொன்றும்,*

*அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்."; அத்துடன்*

(2) அப்பிரிவிற்கான இரண்டாவது காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் காப்பு வாசகங்களைச் சேர்ப்ப தன்மூலமும் :—

“ஆயின், மேலும் அமைச்சர் தேசிய பொருளாதாரத் தின் நலன்களைக் கருத்திற்கொண்டு காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம்,—

(அ) அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விடயத்திற்கு மேற்படி அறவீட்டின் நடைமுறை யிலிருந்து விலக்களிக்கலாம் ; அல்லது

(ஆ) அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது எவையேனும் விடயங்கள் தொடர்பில் அறவிடப்படவும் விதிப்பனவு செய்யப்படவேண் டிய சலுகை வீதமொன்றைக் குறித்துரைக்கலாம்.

இக்காப்புவாசகத்தின் நியதிகளின்படி அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் —

(i) அதற்கு அமைச்சரின் கையொப்பம் பொறிக்கப் பட்டதன்மீது உடனடியாக நடைமுறையிலிருத்த லும் ;

(ii) வசதிப்படக்கூடிய விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் ;

(iii) அதன்பின்னர் வசதிப்படக்கூடிய விரைவில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினால் அங்கீ கரிக்கப்படுதலும் ; அத்துடன்

(iv) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாது விடில் அத்தகைய தீர்மானத்தின் தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும்,

வேண்டும்.

*சட்டம் நடைமுறைக்கு வருதல்.*

**3.** இப்பாகத்தின் ஏற்பாடுகள் 2007, சனவரி 1 ஆம் தேதியி லிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

***4.*** *2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் V ஆம் பாகம், அதன் 14 ஆம் பிரிவில், "2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் V ஆம் பாகத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5.** *இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*